கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 78/2024

வா.சா.1 – பன்னீர் செல்வம்

11–08–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி.

கீழ்கண்ட ஆவணங்கள் வாதி தரப்பில் குறியீடு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 21.01.2011 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் | சான்றிட்ட நகல் |
| 2. | வா.சா.ஆ.2 | அ.வ எண். 321/2011 ன்தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |
| 3. | வா.சா.ஆ.3 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| 4. | வா.சா.ஆ.4 | திருப்பப்பட்ட அஞ்சல் உறை | அசல் |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக

1. மகேந்திரன் இவ்வழக்கில் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியாது. தாவா சொத்து பொறுத்து ஏற்பட்டுள்ள கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியில் சொத்தை வங்கியில் அடமானம் வைத்திருந்தோம் என்றால் சரிதான். அந்த கடனை 2016 ம் ஆண்டு திருப்பினேன். மீண்டும் சொத்தை HFFC வங்கியில் அடமானம் வைத்துள்ளேன். ஒப்பந்தத்தை பதிவு செய்தபோது என்னையும் பிரதிவாதியையும் சார் பதிவாளர் விசாரித்து அதன் பிறகு தான் ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எங்களை சார்பதிவாளர் விசாரிக்கவில்லை.

2. பதிவாளர் என்னை எதற்காக அன்று பதிவு அலுவலகத்திற்கு வந்தேன் என்று கேட்கவில்லையா என்றால் கேட்கவில்லை. அசல்

ஆவணம் வங்கியில் இருந்ததால் பதிவு செய்யமுடியாது என்று நான் பிரதிவாதியிடம் சொன்னதற்கு அவர் ரியல் எஸ்டேன் தொழில் செய்வதால் அவரது பவரைக்கொண்டு பதிவு செய்துகொள்ளவதாக என்னிடம் கூறினார். மேற்படி விபரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 20.04.2024ல் என்ன பைசல் செய்யப்பட்டது என்றால் ஒப்பந்தத்தை ரத்து செய்து கொடுப்பதாக மகேந்திரன் கூறினார் ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.

3. மு.வ. 322/2011 வழக்கை கிரைய ஒப்பந்தப்படி சொத்தினை வங்கியில் அடமானம் செய்திருப்பதால் அதனை கிரையம் செய்து கொடுக்க இயலாது என்பதால் கிரைய முன்பணத்தை கொடுப்பதாக சொன்னதால் மேற்படி வழக்கை பிரதிவாதி நடத்தவில்லை என்றால் மேற்படி வழக்கு விபரம் எனக்கு தெரியாது, பிரதிவாதியும் என்னிடம் கேட்கவில்லை. எதற்காக ஒப்பந்தம் செய்தோம் என்றால் அவரிடம் பணம் வங்கியதற்காக என்னை அழைத்துச்சென்று பதிவு அலுவலகத்தில் கையெழுத்து வாங்கினார். மேற்படி விபரத்தை அறிவிப்பிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. எவ்வளவு கடண் பெற்றேன் என்றால் ரூ.90,000/- அதனை நான் இன்றுவரை கொடுக்கவில்லை. ரூ.90,000/-த்தை கொடுத்துவிட்டால் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துகொடுப்பதாக சொன்னாரா என்றால் சரியல்ல. பணத்தை கொடுக்காமலையே

ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு நான் கொடுக்கவேண்டிய ரூ.90,000/-த்தை வட்டியுடன் கொடுத்தால் ஒப்பந்தத்தை அவர் ரத்து செய்ய தயாராக உள்ளார் என்றால் பிரதிவாதியின் உறவினர் என்னிடம் ஏற்கனவே ரூ.2,00,000/- வாங்கிவிட்டார். மேற்படி விபரத்தை அறிவிப்பிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவறது பெயர் என்ன என்றால் லோகநாதான்.

6. லோகநாதன் பிரதிவாதியின் மாமன் மகன். லோகநாதனின் அப்பா பெயர் தெரியாது. அவர் ஆட்டிபாளையத்தில் குடியிருக்கிறார். கதவு எண் தெரியாது. தோட்டத்தில் குடியிருக்கிறார். நான் பிரதிவாதிக்கு கொடுக்கவேண்டிய கிரைய முன் தொகையை கொடுக்காமல் கிரைய ஒப்பந்தத்தை ரத்துசெய்ய வேண்டும் என்று வழக்குரை தாக்கல் செய்து முன்னுக்கு பின் முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய முன் பணத்தை திருப்பி கொடுப்பதற்கு 12 ஆண்டுகள் காலக்கெடு உள்ளதை தெரிந்துகொண்டு மேற்படி காலக்கெடு முடிந்ததை தெரிந்து கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.